2014 ஆகஸ்ட் 8]

**379—**

## பேருந்து வசதி

***17944—திரு. க. பாண்டியராஜன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஊராட்சி ஒன்றியம், நெடுங்குளம் ஊராட்சி, கள்ளிப்பட்டி மற்றும் நல்லுத்தேவன்பட்டி கிராமங்களிலுள்ள மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் சிவகாசியிலிருந்து அதிவீரன்பட்டி வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) அரசுப் போக்குவரத்துக் கழகம், விருதுநகர் மண்டலம் சார்பில் சிவகாசியிலிருந்து திருத்தங்கல், அதிவீரன்பட்டி வழியாக சுக்கிரவார்பட்டிக்கு பள்ளி நேரங்கள் உட்பட, 2 நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 8 தனி நடைகளும், திருத்தங்கலிலிருந்து வெள்ளையாபுரம், சுக்கிரவார்பட்டி, கள்ளிப்பட்டி, நல்லுத்தேவன்பட்டி வழியாக கிருஷ்ணன்கோவிலுக்கு 8-7-2012 முதல் இயக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடியசைத்துத் துவக்கி வைக்கப்பட்டு, ஒரு நகரப் பேருந்துமூலம் தினசரி 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான சாலைகள், வரமான பேருந்துகள் மூலமாக ஓர் இணைப்புப் புரட்சியை* Connectivity Revolution-*ஐ தமிழகத்தில் உருவாக்கிக் கொண்டுவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஜென்ம தினத்தன்று மனித நேய*

குருதிக் கொடைக்காக தமிழகத்தினை Guinness உலக ஏட்டில் இடம்பெற வைத்த போக்குவரத்துத் துறையினை உளமாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இந்தியாவிலேயே பேருந்துக் கட்டணத்தில் மட்டும் கடைசி இடத்திலும், மற்ற திறன்சார்ந்த அனைத்துக் குறியீடுகளிலும் இந்தியாவில் முதலிடத்திலும் இருக்கும் இந்தத் துறையின்கீழ், எனது விருதுநகர் தொகுதி மற்றும் ஊராட்சி ஒன்றியம், நெடுங்குளம் தொடங்கி தாழப்பட்டி, சுக்கிரவார்பட்டி, அதிவீரன்பட்டி, வடமலாபுரம் வழியாக திருத்தங்கல், சிவகாசி செல்லும் 24 கிலோ மீட்டர் தூரம் வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்கி, கந்தக பூமியின் கடின உழைப்பாளிகளுக்குப் பேருந்து வரம் தர இந்த அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியிலிருந்து நல்லுதேவன்பட்டிக்கு நேரடியாக பள்ளி நேரங்களில் மாணவச் செல்வங்கள் பயன்பெறக்கூடிய வகையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவு பெற்று, ஆய்வு செய்து, பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் மாவட்டத் தலைநகராம் விருதுநகரிலிருந்து பெங்களூரு வரைக்கும் மற்றும் கோவை, சேலம், திருச்சிக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கோரும், அதேவேளையில் SETC-ன் Ticket Booking Centre விருதுநகரில் அமைத்திடவும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிருஷ்ணன்கோயிலில் துவங்கி எம். புதுப்பட்டி-கூடமுடையார் கோயில், முதலிப்பட்டி, கன்னிசேரி, R.R. நகர்,

2014 ஆகஸ்ட் 8]

கோட்டூர் வழியாக இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோயில் வரை 32 கிலோ மீட்டர் புது வழித்தடம் அமைத்து, பேருந்து இயக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்ட மக்களுடைய நலன் கருதி, மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30 புதிய வழித்தடங்களையும், 100 புதிய பேருந்துகளையும் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த வழித்தடங்களில் ஆய்வு செய்து பயணிகள் மற்றும் மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவு பெற்று பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குண்டான பேருந்து முன்பதிவு செய்வதற்குரிய நிலையம் வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, அங்கே முன்பதிவு நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு அருகில் இருக்கக்கூடிய ஆன்மீகத் தலங்களான திருப்புல்லாணி, உத்தரகோசமங்கை, அதேபோல் சேதுக்கரை ஆகியவற்றை இணைக்கக்கூடிய ஒரு வட்டப் பேருந்து வழித்தடத்தில், பேருந்து இயக்குவதற்கு அரசு முன்வருமா என்று வினவ விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், தொகுதி மக்கள் பயன் பெறக்கூடிய வகையில் 3 ஆண்டுகளில் 14 புதிய பேருந்துகளையும், 14 வழித்தட நீட்டிப்புப் பேருந்துகளையும், (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல 74 புதிய பேருந்துகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கி, இன்று இராமநாதபுரம் தொகுதி மக்கள் பயன்பெற்று வருகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்களில் ஆய்வு செய்து பயணிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவு பெற்று அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

**முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூலக்கரையில் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதியில் இருக்கக்கூடிய இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோயில் ஒரு மகத்தான சக்திபீடம். அதைச் சுற்றுலா மையமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அம்மன் வழிபாடு என்பது ஆதி காலத்துப் பழக்கம். இருக்கன்குடிக்கு ஏராளமான பக்தர்கள் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நேரடியாக இருக்கன்குடியிலிருந்து இராமேஸ்வரம் செல்வதற்கு, பேருந்து இயக்குவதற்குக் கோரிக்கை விடுத்த வண்ணம் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, இருக்கன்குடியிலிருந்து நேரடியாக இராமேஸ்வரம் செல்வதற்கு குளு குளு வசதியோடு பேருந்து வசதி ஏற்படுத்தித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

2014 ஆகஸ்ட் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மக்களும் சிறப்பான வசதிகளைப் பெற வேண்டும், தரமான பேருந்து வசதிகளைப் பெற வேண்டும், உரிய நேரத்தில் அவர்கள் செல்கின்ற இடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்று ஆண்டுகளில் மட்டும் 1,436 புதிய வழித்தடங்கள் மற்றும் சென்னையில் 40 சிற்றுந்துகளுக்குண்டான வழித்தடங்களையும் அவருடைய திருக்கரங்களால் கொடியசைத்து துவக்கி, அவை மக்களுடைய பயன்பாட்டில் உள்ளன. மேலும் பள்ளி நேரங்களில் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, பள்ளிக் கல்வித் துறையின்மூலம் பெறப்படுகின்ற கோரிக்கைகளையும் ஏற்று, உடனடியாகப் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, இயக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்களில் ஆய்வு செய்து பயணிகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப, பயணிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலிருந்து மதுரை வழியாக பெங்களூருவுக்கு ஒரு குளிர் சாதனப் பேருந்து இயக்கப்பட வேண்டும் என்ற அந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஆகஸ்ட் 8

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியிலிருந்து பெங்களூருவுக்கு பேருந்து இயக்கப்படுகின்ற வழித்தடங்கள் இரு மாநிலங்களுக்கு உட்பட்ட வழித்தடங்களாக இருக்கின்றன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று இரு மாநிலங்களுக்குண்டான அந்த வழித்தடங்களுக்குண்டான ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது அது பரிசீலிக்கப்பட்டு அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 380, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**380—**

## ஆவின் பாலகம்

***36137**—**திரு. என். முருகுமாறன்:**

*மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ஆவின் பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனையினை அதிகரிக்கும்*